TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
# முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

8075809

C

1. District : Tirunelveli
மாவட்டம்
PS: Vigilance and Anti Corruption
காவல்நிலையம்
Year: 2021
ஆண்டு
FIR No.: 12/2021
மு.த.அ. எண்
Date: 12.11.2021
நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018
Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from : 10.11.2021 09.30 hrs
நாள் முதல்
Date to :
நாள் வரை
Time Period :
நேர அளவு
Time from :
நேரம் முதல்
Time to :
நேரம் வரை
(b) Information Received at PS. Date : 12.11.2021
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : 08.00 hrs
நேரம்
(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time :
நேரம்

4. Type of Information : Written/ Oral : Oral
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Sankupuram Panchayat Office. Sirvagiri Taluk. 80 Km North West
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address :
முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District :
மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S.PANDI
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : Tr.SOKKIAH
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 1961
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : INDIAN
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue :
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : COOLI
தொழில்
(g) Address : 1/27, Karuppasamy Kovil PANDIAN NAGAR, SANKUPURAM.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr.Murugan, Panchayat Secretary, Sankupuram Village Panchayat, Sivagiri Taluk, Tenkasi District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
No delay.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

Not arise

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 12.11.2021-ம் தேதி காலை 08.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது திரு.S.பாண்டி என்பவர் கொடுத்த புகார் வாக்குமூத்தை பதிவு செய்தும், அவரிடம் கையொப்பம் பெற்றும், இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட சங்குபுரம் பஞ்சாயத்து செயலாளர் திரு.முருகன் என்பவர் பற்றி ரகசிய விசாரணை செய்து அவரது நடத்தைகளை அறிந்தும் புகார் வாக்குமூலத்தில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 12.11.2021-ம் தேதி 09.00 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.12/2021 u/s 7(a) of PC Act 1988 (as amended in 2018) என வழக்குப் பதிவு செய்தேன். புகார் வாக்குமூலத்தின் விபரம் பின்வருமாறு: திரு.சொ.பாண்டி, வயது 60/2021, த/பெ சொக்கையா, கதவு 1/27, கருப்பசாமி கோவில் தெரு, பாண்டியன் நகர், சங்குபுரம் அஞ்சல், சிவகிரி தாலுகா, தென்காசி மாவட்டம் என்பவரது வாக்குமூலம். நான் மேலே கண்ட முகவரியில் எனது மனைவி மருதாத்தாள் மற்றும் மகள் கலைச்செல்வியுடன் வசித்து வருகிறேன். நான் மூன்றாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உண்டு. என்னுடைய மகள் கலைச்செல்வியின் இடது கை மற்றும் இடது கால் ஊனமாக இருப்பதால் திருமணம்

S.பாண்டி 12.11.2021

[signature] 12/11/21

D. Robin Gnanasingh
Inspector of Police
VAC, Tirunelveli.

12/11/2021 at 09.40 hrs.

ஆகாமல் என்னுடன் இருக்கிறாள். என்னுடைய மகன் தேவகுமாருக்கு திருமணம் முடிந்து தற்போது கோயம்புத்தூரில் வண்டி ஓட்டி வருகிறான். நான் குடியிருந்து வரும் கருப்பசாமி கோவில் தெருவில் உள்ள எனது வீடானது பழைய ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் போட்ட வீடாகும். மேற்படி வீட்டினை மாற்றி கான்கிரீட் போட்டு புதுப்பித்து கட்டுவதற்கு பிரதம மந்திரி திட்டத்தின்கீழ் எங்களது சங்குபுரம் பஞ்சாயத்து மூலம் பல முறை விண்ணப்பித்தேன். இது தொடர்பாக பஞ்சாயத்து கிளர்க் திரு.முருகனிடம் கேட்கும்போது ஏதாவது காரணம் சொல்லி எனக்கு வீடு ஒதுக்கீடு ஆகவில்லை என்று கூறிவந்தார். கடந்த ஆறு அல்லது ஏழு மாதங்களுக்கு முன்பு அதாவது தேர்தலுக்கு முன்பு பிரதம மந்திரி திட்டதின்கீழ் எனது வீட்டினை மாற்றி புதுப்பித்து வீடு கட்டுவதற்கு மீண்டும் சங்குபுரம் பஞ்சாயத்து கிளர்க் திரு.முருகனிடம் மனு கொடுத்தேன். மேற்படி மனு தொடர்பாக அவரை பார்த்தபோது அவர் தேர்தல் முடியட்டும் என்று சொல்லி வந்தார். இந்நிலையில் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு வாசுதேவநல்லூர் யூனியன் ஓவர்சீயர் எனது வீட்டை வந்து பார்த்துவிட்டு போட்டோ எடுத்துவிட்டு சென்றார். இது தொடர்பாக நான் 10.11.2021ம் தேதி காலை சுமார் 09.30 மணிக்கு சங்குபுரம் பஞ்சாயத்து ஆபிசில் வைத்து கிளர்க் திரு.முருகனை பார்த்து மேற்படி திட்டத்தின்கீழ் வீடு கட்டுவது பற்றி கேட்டபோது அவர் தனக்கு ரூ.30,000/- கொடுத்தால்தான் அதிகாரிகளிடம் சொல்லி எனது பெயரை மேற்படி திட்டத்தின் பயனாளிகள் பட்டியலில் சேர்த்து எனக்கு வீடு கட்ட வேலை உத்தரவு யூனியன் ஆபிசில் இருந்து வாங்கி கொடுக்கமுடியும் என்று சொன்னார். நான் அவரிடம் கூலி வேலைதான் செய்து வருகிறேன். ரொம்ப கஷ்டத்தில் உள்ளேன். அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் இப்போது ரூ.20,000/- கொடு, மீதி பணம் ரூ.10,000/-ஐ முதல் பில்லுக்குரிய பணம் பேங்கில் ஏறியதும் அதில் இருந்து எடுத்து கொடு என்று சொன்னார். மேலும் ரூ.20,000/-ஐ இரண்டு நாளில் கொண்டு வந்து தந்தால் தான் வேலை உத்தரவு வாங்கி கொடுப்பேன் என்றும், இல்லை என்றால் எனக்குரிய வேலை உத்தரவை வேறு யாருக்காவது மாற்றிவிட்டுவிடுவேன் என்றும் சொன்னார். நானும் வேறு வழியில்லாமல் பணம் ஏற்பாடு செய்து கொண்டு வருவதாக கூறி வந்துவிட்டேன். வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்ததில் சட்டப்படியான வேலை செய்து கொடுக்க பஞ்சாயத்து கிளர்க் திரு.முருகனுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க மனம் கஷ்டப்பட்டது. நேற்று 11.11.2021ம் தேதி பணம் ஏற்பாடு செய்த பின்பு மேற்படி பஞ்சாயத்து கிளர்க் திரு.முருகனுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பம் இல்லாததால் இன்று 12.11.2021ம் தேதி திருநெல்வேலி லஞ்ச ஒழிப்பு அலுவலகம் வந்து இந்த புகார் வாக்குமூலம் கொடுக்கிறேன். என்னிடம் பிரதம மந்திரி திட்டத்தின்கீழ் வீடு கட்ட வேலை உத்தரவை அதிகாரிகளிடத்தில் சொல்லி பெற்றுத்தர லஞ்சம் கேட்ட பஞ்சாயத்து கிளர்க் திரு.முருகன் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். படிக்க கேட்டேன் நான் சொன்னபடி சரியாக உள்ளது. ஒம்.S.பாண்டி, 12.11.2021.

மேற்படி புகார் வாக்குமூலமானது இன்று 12.11.2021ம் தேதி காலை 08.00 மணி முதல் 08.30 மணி வரை புகார்தாரர் திரு.பாண்டி சொல்லச்சொல்ல என்னால் (D.ராபின் ஞானசிங், காவல் ஆய்வாளர், ஊ.த. ம.க.பிரிவு, திருநெல்வேலி) எனது மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அவரிடம் படித்து காண்பித்து சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு கையொப்பம் பெறப்பட்டது. இந்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் இன்று 12.11.2021ம் தேதி காலை 09.00 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் (ம) கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 12/2021 ச/பி 7(a) of PC Act, 1988 (as amended in 2018) ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டது. sd.D.Robin Gnanasingh, Inspector of Police, V&AC, Tirunelveli.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் வாக்குமூலம் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

12/11/21

(D. Robin Gnanasingh)
Inspector of Police
V&AC, Tirunelveli